வாரியாகப் புள்ளிவிவரம் இருக்கிறதா? முந்திரிக் கொட்டையைப் பதனிட்டு செப்பனிடுகிற தொழில் கேரளாவில் நடக்கிறது. இப்போது அங்கே தொழிலாளர் தகராறு மிகுதியாக இருப்பதை யொட்டி கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகுதியாக கேரளா தொழில் அதிபர்கள் வந்து நிறுவனம் செய்கிறார்கள். ஆனால் இங்கே பதனிடப்பட்ட முந்திரியை அங்கே கொண்டுபோய் ஏற்றுமதி செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயே அவற்றை ஏற்றுமதி செய்து வெளிச் செலாவணி வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: வட ஆற்காடு மாவட்டத்தில் 390 ஏக்கரும், தென்னாற்காடு மாவட்டத்தில் 16,338 ஏக்கரும், சேலம் மாவட்டத்தில் 163 ஏக்கரும், தர்மபுரி மாவட்டத்தில் 522 ஏக்கரும், கோயம்பத்தூர் மாவட்டத்தில் 811 ஏக்கரும், திருச்சி மாவட்டத்தில் 7,472 ஏக்கரும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,190 ஏக்கரும், ராமநாதபுரம் மாவட்டத்தில் 10,721 ஏக்கரும், திருநெல்வேலி மாவட்டத்தில் 2,934 ஏக்கரும், செங்கற்பட்டில் 24,512 ஏக்கரும் சாகுபடி செய்கிறார்கள். கனம் அங்கத்தினர் கோருகிற கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவு விளைகிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேட்டால் விசாரித்துச் சொல்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டையை வெளிநாடுகளுக்கு அனுப்பி வெளிநாட்டுச் செலாவணி கொண்டுவருவதைப் போல முந்திரி பழத்தைப் பதனிட்டு அமெரிக்கா போன்ற வெளி நாடுகளுக்கு அனுப்பி அந்நிய செலாவணி பெற முயற்சிக்கப்படுமா? அத்துடன் முந்திரி ஓட்டை பக்குவப்படுத்தினால் பல வஸ்துக்கள் கிடைப்பதாகச் சொல்கிறார்களே, அவைகளையும் செய்ய முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: முந்திரி பழம் அனுப்புவதாகத் தகவல் இல்லை. ஓட்டிலிருந்து பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் செய்யலாம் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. டி. சந்தோஷம்: அப்படி ஓட்டிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் இப்போது தயாராகி விற்பனைக்கு வருகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது எண்ணெய் தான் அதிலிருந்து எடுக்கப்படுகிறது. பிளாஸ்டிக் போன்ற பொருள்கள் இன்னும் எடுக்கப்படவில்லை.

Vacant lands of Railways

* 126. *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the vacant lands near railway lines and railway stations belonging to the Railways have been handed over to the Tamil Nadu Agricultural Department, under Food Production Scheme;

(*b*) if so, the mode adopted in leasing out those vacant lands to the agriculturists for cultivation;

(*c*) the acreage of such lands under the Agriculture Department in Tamil Nadu; and

(*d*) the lease amount realised annually?

[5th March 1969

ரயில்வேக்குச் சொந்தமான காலியிடங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரயில்வேக்குச் சொந்தமான ரயில்பாதை, புகைவண்டி நிலையம் ஆகியவைகளுக்கு அருகில் உள்ள காலியிடங்கள் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் தமிழக வேளாண்மைத் துறை வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அந்த காலி நிலங்களில் பயிர் செய்ய விவசாயிகளுக்கு எம்முறையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது?

(உ) தமிழகத்தில் அப்படி எவ்வளவு நிலம் வேளாண்மைத் துறை வசம் இருக்கிறது?

(எ) ஆண்டுதோறும் கிடைக்கும் குத்தகைப் பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் கீழ், உணவுப் பயிர்களைப் பயிரிடக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்காகத் தம்மிடம் உபரியாகவுள்ள நிலங்களை ரயில்வே நிர்வாகத்தினர் 1942-ம் ஆண்டில் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைத்தனர். அத்தகைய நிலங்களை அவ்வாண்டு முதற்கொண்டு பல்வேறு மாவட்டங்களில் வருவாய்த் துறை குத்தகைக்கு விட்டு வருகின்றது.

(இ) (1) குத்தகைக் கால அளவு முதல் முறை மூன்றாண்டுக் காலமாகும். குத்தகைக்காரர் நிலங்களை ஏற்றவகையில் பயன் படுத்தியிருப்பின் அவருக்கே, அதே நிபந்தனைகளின் கீழ் மேலும் இரண்டு ஆண்டுக் காலத்துக்குக் குத்தகை அளிக்கப்படும்.

(2) ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பயிரிடப்பட்டு வருகின்ற அத்தகைய நிலங்கள் ஒவ்வோராண்டும் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும்.

(3) ரயில்வே நிர்வாகத்தினர் இழப்பீடு எதுவும் கொடுக்காமல் எந்தச் சமயத்திலும் நிலத்தை எடுத்துக் கொள்ள உரிமையுண்டு. ஆனால் குத்தகை முடிவடையாத காலத்துக்கான விகிதாச்சாரக் குத்தகை தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கு உட்பட்டு, இந்த உரிமை ரயில்வே நிர்வாகத்தினருக்கு உண்டு.

(உ) மாநில அரசாங்கத்துக்கு ஒப்படைக்கப்பட்ட ரயில்வே நிலத்தின் தோராயமான பரப்பளவு 1,283 ஏக்கர்.

(எ) சராசரியாக ஆண்டுக் குத்தகைத் தொகை சுமார் ரூ. 25,000 ஆக இருக்கிறது. மாநில அரசாங்கத்துக்கும், ரயில்வே நிர்வாகத்தினருக்குமிடையே தற்போதுள்ள ஏற்பாட்டின் படி, குத்தகைத் தொகையில் 95 சதவீதம் ரயில்வே நிர்வாகத்தினருக்கு கொடுக்கப்படுகிறது. நிர்வாகச் செலவுகளின் பொருட்டு எஞ்சியுள்ள 5 சதவீதக் குத்தகைத் தொகையை மாநில அரசாங்கம் தன்னிடமே வைத்துக் கொள்கிறது.